புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 24. TML1163 - தொல்காப்பியர் குறிப்பிடும் பெண்கள்

ம.சௌந்தர்யா
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருவள்ளுவர் பல்கலைகழகம்,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் மாவட்டம்.635601

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டயத் தமிழகத்தில் அகவாழ்கையை கற்பு, களவு என்று இருநிலைகளாக பகுத்தனர். களவு என்பது சமூகத்தில் பிறர் அறியா வண்ணம் மேற்கொள்ளப்படும் வாழ்வு எனவும் கற்பு என்பது சமூகத்தில் அனுமதியோடு வெளிப்படையான வாழ்க்கையை மேற்கொள்வதாகவும் அமைகிறது. கற்பு என்னும் சொல்லுக்கு அளிக்கும் விளக்கம் அதன்வழி தொல்காப்பியர் குறிப்பிடும் பெண்கள் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம்.*

**முன்னுரை**

*கற்பு என்னும் சொல்லின் மதிப்பு காலத்திற்கு காலம் மாறிக்கொண்டே வந்துள்ளது. ஆதிமனிதன் கற்பை மாந்திரீக மதிப்புடையதாகக் கருதினான். நாகரீகமடைந்த மக்கள் கற்பை உயர்ந்த அறமாக போற்றினர். ஆதிமனிதன் வளமையாய் போற்றிய கற்பினின்றும் மாறுப்பட்ட இயற்கைக்கு முரணான திணிப்பே பிற்கால கற்பு என்று கூறலாம். ஈ.கோ. பாஸ்கரதாஸ், கற்பு என்ற சொல்லைக் கல்+பு என்று பிரித்துக் கல் என்று பகுதிக்குக் கற்றமல். தோண்டுதல், கல் என்று மூன்று பொருள்மன் இருப்பநைர் கூறுகிறார். கற்றலாவது வாழ்வுக் கலையைக் கற்றல் என்றும் தோண்டுதலானது உள்ளத்து உணர்களைப் பண்பட்ட நிலையில் வெளிக்கொணர்வது என்றும் கல்லாவது ஊசலாடா உறுநிநிலை என்றும் கூறி மூன்று நிலைகட்கும் மக்களை நெறிபடுத்த வல்லதே திருமணம் என்று அவர் விளக்குகிறார்.இவர்தம் கருத்து பொதுவாகக் கூறப்பட்டதாக அமைகிறது. இறுதியிற்கூறிய ஊசலாடா உறுதிநிலையைச் சமூகவியல் நோக்கில் நுணுகிப் பார்த்தால் முதல் இரண்டு கருத்துக்களும் ஆடவர், பெண்டீர் என்ற இருபாலர்க்கும் இயைந்து வருவது போல் அது பொருந்தாமல் போவதும் பெண்டீர்க்கு மட்டுமே கற்புத்திட்டம் வற்புறுத்தப் பட்டதாக தெரிகிறது. ஆவ்வகையில் கற்புகால தலைவி பற்றி கூறுவதே இவ்வாய்வுக் கட்டுரை ஆகும்.*

**தொல்காப்பியத்தில் கற்பு**

*கற்பு என்பது இல்லறவொழுக்கம், கற்பிக்கப்படுவது கற்பு, கற்பெனப்படுவது உயரிய ஒழுக்கம். பிறர் நெஞ்சம் புகாமை என்று பல்வேறு கற்புக்குக் காட்டுவது அறியத்தக்கது.*

*கற்பு என்பதற்கு மகளிர்நிறை, இல்லரவொழுக்கம், நீதிநெறி, முறைமைவிதி, கல்வி, கற்பனை, மதில், மதிலுண்மேடை, முல்லைக்கொடி" போன்ற பல பொருள்களைக் கணலாம்.களவு கொண்டு விடுதற்குறியது. கற்பு கைக்கொள்ளுதற்குரியது என்று களவின் நிலையாமையையும் கற்பின் மூலம் கற்பு வாழ்ககைக்குக் களவு நல்ல தோற்றவாய்" என்று உணரமுடிகிறது.*

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குறி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (தொல்.பொருள் : 140)

*என்னும் தொல்காப்பிய நூற்பா கொள்ளுதற்குரிய தலைவன், கொடுத்தற்குரிய மரபினோர் கரணவழி நின்று தலைவியைக் கொடுக்கக் கொள்ளும் சடங்குவழிப்பட்ட மணநிகழ்வே கற்பு என்று வரையறுக்கிறது. மறை வெளிப்படுத்தல், தமரிற்பெறுதல், மகிழ்தல், புலத்தல், ஊடல்தீர்தல், பிரிதல் என்று கற்புக் கால நிகழ்வுகளை,*

''மறை வெளிப்படுத்தலும் தமரின் பெறுகலும்
இமை முதனாகிய இயல் நெறி திரியாது
மலுவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே

*தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கிறது.*

**பெண் மீதான திணிப்பு**

*ஈ.கோ. பாஸ்கரதாஸ், கற்பு என்ற சொல்லைக் கல்+பு என்று பிரித்துக் கல் என்று பகுதிக்குக் கற்றமல். தோண்டுதல், கல் என்று மூன்று பொருள்மன் இருப்பனைர் கூறுகிறார். கற்றலாவது வாழ்வுக் கலையைக் கற்றல் என்றும் தோண்டுதலானது உள்ளத்து உணர்களைப் பண்பட்ட நிலையில் வெளிக்கொணர்வது என்றும் கல்லாவது ஊசலாடா உறுநிநிலை என்றும் கூறி மூன்று நிலைகட்கும் மக்களை நெறிபடுத்த வல்லதே திருமணம் என்று அவர் விளக்குகிறார்.இவர்தம் கருத்து பொதுவாகக் கூறப்பட்டதாக அமைகிறது. இறுதியிற்கூறிய ஊசலாடா உறுதிநிலையைச் சமூகவியல் நோக்கில் நுணுகிப் பார்த்தால் முதல் இரண்டு கருத்துக்களும் ஆடவர், பெண்டீர் என்ற இருபாலர்க்கும் இயைந்து வருவது போல் அது பொருந்தாமல் போவதும் பெண்டீர்க்கு மட்டுமே கற்புத்திட்டம் வற்புறுத்தப் பட்டதாக தெரிகிறது.*

**தலைவனை பிறிந்த தலைவி**

*இல்லற ஒழுக்கம் அன்பினால் நிகழாது விட்டால் பெரும் கேடு உண்டாகுமென பழந்தமிழர் நினைத்தனர், ஏனென்றால் ஓர் ஆண்மகனும் ஒரு பெண் மகளும் தம்முள் ஒருவரையொருவர் உயிர்போல கருதி மிருந்த அன்பினால் ஒழுகினாலன்றிப் பெண்களுக்குக் கற்பொழுக்கம் நிலை பெறாது.*

*கற்பொழுக்கம் நிலை பெறாவிடில் நன்மக்களைப் பெறுதல் இயலாது. உலகின் ஒருவரோடொருவர் அமைதியாய் இருந்து வாழா பகையும் சினமும் கொண்டு அல்லுறுவர்.*

*தலைவி தலைவனை வீட்டுக் களவில் மட்டுமின்றி கற்பு வாழ்க்கை நடக்கும் போதுகூடப் பிரிந்திருக்கமாட்டாள். அதை அவன் விரும்பாள் என்பதை தலைவன் தோழிக்கு உணர்த்துவதை,*

''பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு'' (அகம் : 5)

*என்ற பாடலின் மூலம் அறியலாம்.*

*இதிலிருந்து தன் பாவத்தை அப்போதைக்கு நிறுத்தியிருத்தாலும் தலைவன் ஒரேயடியாக தங்கிவிடுவதில்லை, மீண்டும் அவன் தலைவியிடம் இல்லறத்திற்கு வேண்டிய பொருளீட்டும் வினையாற்றுதலே ஆடவர்க்கு உயிர் என்று கூறிப்பிரிய முற்படுகிறான்.*

*முல்லையும் கற்பும்*

*முல்லைத்திணையில். கால்நடை வளர்ப்பை தொழிலாக கொண்ட ஆயர் வாழ்ந்ததால் கற்பு இத்திணையில் கால் கொண்டிருக்க வாய்ப்பிருக்கிறது.*

''முல்லை சான்ற கற்பு'' (நற் : 142)

*என்னும் பாடல் வரி இங்கு குறிப்பிடத்தக்கது. இருத்தல் என்ற முல்லை நில உரிப்பொருளுக்கும் ஆழ்ந்த பொருள் உண்டு. கணவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் பெண் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு இருத்தல் பிற ஆடவர்கள்பால் நாட்டம் செலுத்தாது இருத்தல், இல்வரை இகவாது இருத்தல், என்ற பல்வேறு பொருட்களை உள்ளடக்கியது முல்லைத் திணையின் இருத்தல் ஆகும்.*

*பகைவர்க்கு அச்சம் தரும் காவல் மிகுந்த முதுமையான ஊரில் உள்ள செல்வமிக்க மாளிகையில் நம்மை வெறுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் அடங்கிய குற்றமற்ற கற்பினையும், குளிர்ச்சிப் பொருந்திய கண்ணினையும் மூங்கிலை ஒத்த பருத்த தோளினையும் உடைய தலைவியைக் காண எண்ணியதை,*

''அருங்கடி காப்பின், அஞ்சு வரு மூதூர்த்
திருநகர் அடங்கியே மாசுஇல் கற்பின்,
அரிமதர் மழைக்கண் அமைப்புரை பணைத்தோள்,
அணங்குசால், அரிவையும் காண்குவம்
பொலம்படைக் கலிமாப் பூண்ட தேரே'' (அகம் : 114)

*இன்னும் பாடல் வரிகள் இல்வரை கடவாத கற்புத் திட்பத்தை குறிப்பிடுகிறது.*

*குளிர்ச்சி பொருந்திய மணங்கமழும் காட்டின் கண் நறுமணமுடைய முல்லை மலர்களை சூடுவதற்கு அமைந்த கற்பனை உடைய தலைவி வாழும் ஊர் அமைந்திருப்பதை,*

"தன்னரும் புறவி னதுவே நறுமலர்
முல்லை சான்ற கற்பின்
மேல் இயற்குறுமகள் உறைவுஇன் ஊரே" (அகம் : 114)

*என்னும் பாடல் வரிகள் கற்புக்கும் முல்லைத் திணைக்கும் உள்ள தொடர்பை உணர்த்துகிறது.*

*கற்பும் நாணமும் பெண்ணிற்கே உரியது*

"உயிரினும் சிறந்தன்று நானே நானினும்.
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

*என்னும் தொல்காப்பிய நூற்பா நாணின் சிறப்பையும், நாணத்தை விட கற்பு சிறந்ததையும் விளக்குகின்றன.*

*தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தன் காதல் உள்ளம் வீட்டில் இருப்பவர்களுக்கு புலப்படாமல் மறைத்துக் கொண்டு கிளியுடன் மெல்ல பேசிக் கொண்டிருப்பதைக் கூறும் தலைவன் அவளை சிறப்பிப்பதை,*

"செந்தாப் பயனில்லை முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோ திறந்து, என
இல்லவர் அறிதல் அஞ்சி, மெல்லென
முழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை மாண் நலம் பெறவே"12 (அகம் : 34)

*என்று மதுரை மருதன் இளநாகனாரின் பாடல் வரிகளால் அறியலாம். இவ்விடத்தில் நாணத்தால், மற்றவர் கேட்டு விடக் கூடாதே என்று அஞ்சும் தலைவியின் நிலை பெண் இப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டு இருப்பதை உணர்த்துகின்றது.*

**பொருள் மேல் தலைவிக்கு வெறுப்பு**

*ஆடவன் பல இடங்களுக்கும் சென்று ஈட்டி வந்த பொருளை கற்பு என்னும் கட்டுப்பாட்டை கொண்டு வந்ததால் பெண்ணிற்கு பொருளின் மேல் வெறுப்பு ஏற்படுகிறது. செல்வச்செழிப்பு, பரத்தையரை நாடி சென்ற போது அவ்வெறுப்பு மேலும் வளர்ந்தது.*

*இல்லற இன்பத்தை நுகரத்துடிக்கும் பெண்ணும் பொருளில் மயங்கி போலி மதிப்புக்காக புறம்போகும் ஆணும் முரண்க் கொள்ளும் நிலை அகநானூற்றுப் பாலை பாடல்களில் இடம் பெறுகிறது.*

"பொருளே காதலர் காதல்
அருளே காதலர் என்றி நீயே" (அகம் : 53)

*என்னும் பாடல்களால் அறியலாம்.*

*தலைவி, தன்னைவிட பொருளை பெரியதாய் எண்ணிய தலைவனின் செயலை வெறுத்து கூறுவதும் தலைவன் தன் செலவை குறித்துச் சொன்னதுமே மிகவும் கலங்கி பேச முடியாமல் தடுமாறி இறுதியில் திருந்தது மாதோ நும் செலவு என்று கூறுவதும் அவ்வாறு தடுத்தும் கேளாத தலைவன் அவளின் நிலையை எண்ணி வருந்தினாலும் பொருளின் தேவையால் ஈர்க்கப்பட்டு சென்றுவிடுவதை,*

*எல்லையும் இரவும் வினைவயிற் பிரிந்த*

"முன்னும் முன்உறுபு அடைய உள்ளிய
புதிமறந்து உறைதல் அரிது ஆகின்றே" (அகம் : 299)

*என்னும் பாடல்வரிகள் உறுதிப்படுத்துகின்றன.*

**உடன்போக்கு**

*தகுதியைப் பார்த்து மணமகனைத் தேர்ந்தெடுத்த கற்புச் சமூகத்தில் அதன் எதிர்வினையாய் உடன்போக்கு நிகழ்ந்து. உடன்போக்கு களவு ஒழுக்கத்தின் முடிநிலையாயினும் கட்டுப்பாட்டின் மறுவினையாதலால் இங்கு கூறப்படுகிறது.*

"நனைவினை நறவின் தேறல் மாந்தி
பனைவினை நல்இல் தருமணல் குவைஇ,
பொல்மல் ஓதி எம்மகள் மணன் என,
வதுவை அமர்ந்தனர் நமரே" (அகம் : 221)

*என்ற பாடல்வரிகளால் அறியலாம்.*

முன்பே குறிப்பிட்டதுபோலத் தலைவி தான் மேற்கொண்ட களவு வாழ்வைக் கற்பு வழிப்படுத்தச் சமுதாயம், குடும்பம், சூழல் முதலான அமைப்புகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. சிலநேரங்களில் உடன்போக்கு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குப் பெண்ணே உடந்தையாகவும் இருந்திருக்கிறாள். கயமனாரின் பாலைத் திணைப்பாடலில் தோழி, " நின்னை மிக விரும்பிய அன்னை எய்தும் துன்பத்தை உளத்திற்கொண்டும் நின் தமையன்மாரது புலியை ஒத்த அச்சம் தரும் தலைமையை நோக்கியும் நீதான் கலங்காத மனத்தினையுடையையாகி என் சொல்லை விரும்பி ஏற்றுக் கொள்வாயாக. உடன்போக்கினைத் துணிவாயாக" என்று கூறுகிறாள்

"தெற்றி உலறினும், வயலை வாடினும்,
நொச்சி மென் சினை வணர் குரல் சாயினும்,
நின்னினும் மடவள் நனி நின் நயந்த
அன்னை அல்லல் தாங்கி, நின் ஐயர்
புலி மருள் செம்மல் நோக்கி,
வலியாய் இன்னும்; தோய்கம், நின் முலையே!" (அகம் : 259)

தாயங்கண்ணனாரின் பாடலொன்று தலைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்லுமாறு கேட்கும் தோழியைக் காட்சிப்படுத்துகிறது. தினை முதிர்ந்ததால் தலைவி தினைப்புனம் காக்கவாராள் என்ற எச்சரிக்கையுடன் தொடங்கும் தோழிகூற்று, தலைவனைப் பிரிந்த தலைவி வெளுத்திருப்பதால் ஊரார் அலர் பேசுகின்றனர் எனவே வேடர்களின் தங்கையாகிய கொடிச்சியை அருளவேண்டும் என முடிகிறது.மேலும் இப்பாடலில் "மலையைச் சூழக்கொண்ட உறைதற்கினிய நுமது ஊருக்கு அழைத்துச் சென்று அருள வேண்டுமென்கிறாள். தலைவனும் தலைவியும் மலையைச் சார்ந்தவர்களென்றாலும் தலைவனது இருப்பிடம் வேறு ஊர் என்பதைப் பாடல் உணர்த்துகிறது.

நக்கீரரின் செவிலி கூற்றாயமையும் பாலைத்திணைப்பாடல் தலைவியின் நிலையையும் சுற்றத்தாரின் மனோநிலையையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. "மகளே நினது கூந்தலைப் புனைக என்றதற்கு என்னை வெறுத்து மனம் உடைந்தவளாகி அவள் தன் செல்வ நிலைக்கேற்ற பரிசு, சோழரது உறையூரைப்போன்ற செல்வமுடைய மனையில் ஒப்பனை செய்து தமர் மணம் செய்விக்கப் பொருந்தாதவளாகி ஓமைமரங்கள் நிறைந்த காட்டு வழியில் வேலினையும் உடல் வலிமையினையும் கொண்டு அறியப்படாத தேயத்தின் கண் கொண்டு சென்ற இளையானுக்குப் பொருந்திய பெரிய மடப்பமும் தகுதியும் உடைய என் மகள் நன்கு மதிப்பும் உயர்வும் இல்லாது சிறிய ஊரில் வறுமையுற்ற பெண்டினது புல் வேய்ந்த குடிலாய ஒரு பசு கட்டியுள்ள ஒற்றைத்தூண் கொண்ட இயைபில்லாத வறிய மனையில் சிலம்பு கழித்து அவனுடன் மணம் பொருந்தினாளோ என்று வருந்துவேன்' எனத் தலைவியின் நிலைகுறித்த வருத்தத்தை வெளிப்படுத்துகிறாள் செவிலி.

களவு வாழ்வில் தலைவிக்குப் பெருந்தடையாக இருப்பது அன்னை என்பதைவிடக் காவலாக இருப்பது என்பது பொருந்தும். இதைப்பல பாடல்கள் (பாடல்கள் 20,52,60,65,150,68) பதிவு செய்துள்ளன. இந்நிலையில் தலைவியின் களவை ஆதரித்திருப்பேனே என நொந்து அவளுக்குமுன் அவள் செல்லுமிடம் அடைந்து அவளுக்குப் பெண்டாகி அவளை வரவேற்றிருப்பேனே என வருந்தும் தாயைக் கபிலரின் பாடல் அறிமுகம் செய்கிறது. கருவூர்க்கண்ணம்பாளனாரின் பாடலில் காளையின் மீது அவள் கொண்டுள்ள அன்பின் உறுதியை அறிந்தேன். அவர்களிருவரையும் வதுவை நெறியில் சேர்த்திருப்பேனே என வருந்தும் தாயைக் காணமுடிகிறது. பல பாடல்களில் தலைவனின் பொய்ம்மொழியை நம்பிச் சென்றனள் என வருந்தும் தாய் அல்லது செவிலியைக் காணமுடிகிறது (பா.எ.153,105,117).விற்றூற்று மூதெயினனாரின் பாடலொன்று கன்னியர்மட்டும் உறையக்கூடிய தெய்வம் இருக்கும் காவல்மிகுந்த மாங்காடு என்னும் ஊரினைப்பற்றிய குறிப்பைத்தருகிறது.இப்பாடலில் மாங்காட்டினை ஒத்த காவல் மிக்க தந்தையின் இல் எனத்தலைவனிடம் கூறி வரைவு கடாவுகிறாள் தோழி. கன்னியரைத்தனித்துக் காவலில் வைத்திருந்த நிலையை 'மாங்காடு' பற்றிய பதிவு உணர்த்துகிறது.மாங்காட்டைப்போலத் தந்தையின் இல்லம் தலைவியைக் காவலில் வைத்திருக்கிறது என்பது பாடலின் கருத்து.

**திருமணம்**

"கற்பு என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்ட காலத்தின் தோற்றம் பெற்ற ஒருதார மணமுறை இயற்கையான நிலைமைகளை அடிப்படையாக கொள்ளாமல், பொருளாதார நிலைமைகளை அதாவது, ஆதிகால இயற்கையாக வளர்ந்த பொது சொத்தின் மீது தனிவுடைமை வெற்றி பெற்றிருந்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த முதல் குடும்ப வடிவம் என்று எங்கல்ஸ் விளக்குகிறார்". "திருமணம் பொருளாதார வசதிக்காக செய்து கொள்ளப்படுவது என்பதை க. கிருஷ்ணசாமியும் குறிப்பிடுகிறார்". "ஒருத்திக்கு ஒருவன் என்ற கற்பு வாழ்க்கை நிலத்தை சொத்தாக மதிக்கும் ஜாதிகளில் காணப்படுவதை எடுத்துக் கூறும் அவர், ஒரு கணவர் மனம் என்பதே தவறாக ஒருதாரமணம் என்று குறிப்பிடுவதாகவும் கூறுகிறார்".

*சங்க இலக்கியத்தில் தமிழர்களின் திருமணங்கள் எப்படி பல ஆயிரம் வருடங்களுக்கு முன் இருந்தது என்பதற்கு சான்றாக இரண்டு முக்கிய பாடல்களை நாம் பார்க்கலாம், ஒன்று அகநானூறு 86 வது பாடல் மற்றும் 136 வது பாடல்.*

*அகநானூறு 86 வது பாடல் நல்லாவூர் கிழார் எனும் புலவரால் எழுதப்பட்டது. வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது. தலைமகளைக் கூடி இன்புற்றிருந்த தலைமகன் பண்டு நிகழ்ந்தது பற்றி சொல்லும் பாடல்,*

''வதுவை நல் மணம் கழிந்த பின்றை,
கல்லென் சும்மையர், ஞெரேரெனப் புகுதந்து,
'பேர் இற்கிழத்தி ஆக' எனத் தமர் தர,
ஓர் இற் கூடிய உடன் புணர் கங்குல்,
கொடும் புற ம் வளைஇ, கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர் புறம் தழீஇ,
முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப,
அஞ்சினள் உயிர்த்தகாலை, 'யாழ நின்'' (அகம் : 86)

*இந்தப் பாடலின் பொருள் உழுந்தம் பருப்பைக் கூட்டிச் சமைத்த பொங்கலோடு பெரிய சோற்றுத் திரளை உண்ணுதல் ஆரவாரத்துடன் நிகழ, வரிசையாகக் கால்களையுடைய (கம்பங்கையுடைய, தூண்களுடைய) பெரிய பந்தலில், கொணர்ந்து இட்ட புதிய மணலைப் பரப்பி, மனையில் விளக்குகளை ஏற்றி வைத்து, மாலைகளைத் தொங்கவிட்டு, தீயக் கோள்களின் தொடர்பு நீங்கிய, வளைந்த வெண்ணிலாவை குற்றமற்ற சிறந்த புகழையுடைய உரோகிணி என்னும் நாள் அடைந்த வேளையில், மிக்க இருள் நீங்கிய அழகான காலை நேரத்தில், தலை உச்சியில் குடத்தை வைத்திருப்பவர்களும், புதிய அகன்றப் பானைகளைத் தூக்கி வைத்திருப்பவர்களும் ஆகிய திருமணத்தினைச் செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கல மகளிர் முன்னே தருவனவாகவும் பின்னே தருவனவாகவும் முறையே தந்திட, புதல்வர்களைப் பெற்ற, தேமலுடைய அழகிய வயிற்றையுடைய, தூய அணிகளை அணிந்த நான்கு பெண்கள் கூடி, நல்ல பேறுகளைத் தந்து உன்னை எய்தியக் கணவனை விரும்பிப் பேணும் பெண்ணாக நீ ஆக' என்று தண்ணீருடன் கூடிய ஈரமான இதழ்களையுடைய பூக்களை நெல்லுடன் அவளுடைய அடர்ந்தக் கருமையான கூந்தலில் தூவி வாழ்த்தினர். இவ்வாறு திருமணம் முடிந்த பின்னர், அவளுடைய சுற்றத்தார் ஒலியுடன் விரைந்து வந்து, 'பெரிய மனைக் கிழத்தி ஆவாயாக நீ' என்று அவளை வாழ்த்தி, என்னிடம் அவளைத் தந்தனர் என்கிறான் தலைவன் .*

*மேலும் நாங்கள் இருவரும் புணர்ச்சிக்குரிய ஓர் அறையில் தனிமையில் இருந்தோம் தன் முதுகினை வளைத்து, நாணத்துடன் தன்னுடைய புத்தாடையில் ஒதுங்கினாள் அவள். அவளை அணைக்கும் விருப்பத்துடன், நாணத்தினால் அவள் தன் முகத்தினை மறைத்த ஆடையை நான் நீக்க, அவள் அஞ்சி பெருமூச்சு விட்டாள். 'உன் நெஞ்சில் உள்ளதை மறைக்காது என்னிடம் கூறு' என்றேன் நான். இனிய மகிழ்ச்சியுடன், நாங்கள் ஒன்றாக இருந்த அந்த நொடிகளில், மானின் மடப்பத்தையும், பெருமையான பார்வையையும், ஒடுங்கிய குளிர்ந்த கூந்தலையும் உடையவளாக, சிவப்பு மணிகள் பதித்த காதணி தன் அழகிய காதுகளில் அசைய, நெஞ்சில் மிக்க மகிழ்ச்சியுடன், விரைந்து தலைகுனிந்தாள் அந்த மாமை நிறத்துடைய பெண்.*

**மகப்பேறு**

*கற்பு வாழ்வில் மகப்பேற்றுக்கு மதிப்பிருந்தது. ஆண்மகட்பேற்றையே அகப்பாடல்கள் குறிப்பிடுவதால், அக்காலச் சமூகம் ஆடவர்க்கு மதிப்பளித்தமை பெறப்படுகிறது. அகநானூற்றில் முல்லை, பாலை, மருதப் பாடல்களில் புதல்வன் குறிக்கப்படுவதை,*

''மறுமைஉலகமும் மறு இன் ஏய்துப,
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப்பயந்த செம்மலோர் எனப
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயேஆகுதல் வாய்த்தனம் – தோழி'' (அகம் : 66)

*என்னும் பாடல்வரிகள் ஆண்மக்கள் பேற்றுக்கு சமூகத்தில் இருந்த பெருமையை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது*

**முடிவுரை**

*தொல்காப்பியத்தில் கற்பு என்பது ஆண்களின் மேலாதிக்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடு என்பதை தொல்காப்பியம் மற்றும் அகநானூற்றுச் சான்றுகள் வழியாகவும் புறச்சான்றுகள்*

*வழியாகவும் விளக்கப்பட்டுள்ளது. காதலித்தோரை வஞ்சித்தலும் மணந்தோரைக் கைவிடுதலும் போன்ற அவல நிலைகள் தழைத்தோங்கியதால் கரணச் சடங்குகள் தோன்றுவதற்கு அடிப்படையாய் அமைந்ததை இலக்கண, இலக்கிய சான்றுகள் விளக்கப்பட்டுள்ளன. கற்பிற்குரிய பொருள் விளக்கம், கற்பு காலத்தில் வினைமுற்றி தலைவன் வர காலம் தாழ்த்தியதை எண்ணி தலைவி வருந்தும் நிலையும், தலைவி வருந்தும் நிலையைக் கண்டு தோழி ஆற்றுவிக்கும் முறையையும் உணரமுடிகிறது.*

**துணை நூற்பட்டியல்**


1. நச்சினார்க்கினியர் – தொல்காப்பியம்
   நச்சினார்க்கினியர்
   திருநல்வேலித் தென்னிந்திய நூர்பதிப்புக் கழகம்
   சென்னை–1

2. செயபால். இ.ரா – அகநானூறு
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
   41, பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட்,
   அம்பத்தூர், சென்னை – 600 09


**குறிச்சொற்கள்**

1) அகம் – அகநானூறு
2) தொல்(பொருள்) – தொல்காப்பியம்(பொருளதிகாரம்)